புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# வள்ளுவம் குறித்து ஈரோடு தமிழன்பனின் சமக்காலச் சிந்தனை

முனைவர் ரா. பிரபா
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
பச்சையப்பன் மகளிர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

=====================================================================

ஆய்வுச்சுருக்கம்

இயற்கை எழிலையும், உலகியல் நடப்புகளையும் எழுச்சியுடன் நோக்கி களிப்புறத் துணைச்செய்யும் ஒளிவிளக்கே இலக்கியமாகும். இவவிலக்கியத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியின் காரணமாக நாளுக்கு நாள் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தில் வழுவல'' என்பது போல் கவியுலகில் வளர்ச்சின் அடையாளமாகத் திகழுந்து வரும் கவித்துறையில் தோற்றத்தின் மரபுக் கவிஞர்களால் எதிர்க்கப்பட்டு, பின்னர் புதுமைக் கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ள சமூகவளர்நிலை மாற்றத்திற்கும், இவ்வுலகில் பறந்து விரிந்துக் காணக்கூடிய பாடுப்பொருளுக்கும் ஊன்றுகோலாகத் திகழக்கூடியது கவிதையாகும்.

இக்கால ஊற்றில் பல புதுக்விதைக் கவிஞர்கள் புத்தெழுச்சிப் பெற்று பிரவாகம் எடுத்தனர். அவர்களில் மரபுக்கவிதையில் இருந்து புதுக்கவிதையைத் தனது கைக்கோளாக் கொண்டு சமுதாயம் சார்ந்து உள்ளடக்கத்தினைத் தனது எழுத்துக்களால் ஏடுகளில் ஏற்றிச் செந்நெறிப் போக்கினைக் கடைப் பிடித்து சொற்களின் பொருள் விரிவுக்குள் நின்று புதிய வளர்ச்சி முறைகளைச் சுட்டிக்க்காட்டி உருவகித்துப் பல்வேறு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவ்வரிசையில் வள்ளுவனிடம் '' ஊடல் கொண்டு உரையாடுவதைப்போல்'' பரிமாணம் பெற்ற நூல் ''வணக்கம் வள்ளுவ'' என்பதாகும். இக்கவிதையில் திருக்குறளை இன்றையச் சிந்தனையோட்டத்தில் பொருத்திப் பார்க்கக்கூடிய சுழலில் இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

குறிப்புச் சொற்கள் : மகாகவி, வள்ளுவம், சமுதாயம், திருவள்ளுவர், புதுக்கவிதை.ஒழுக்கம்,மானுடம்

## முன்னுரை :

காலத்தின் மாற்றங்களுக்கும், சூழலின் விரைவுக்கேற்ப இலக்கிய உலகும் அத்தேடலில் பகிர்வு கொண்டு நகர்ந்து கொண்டிருக்கிறது. அத்தேயத்தில் மரபுக்கவிதை, வசனக்கவிதை, புதுக்கவிதை, ஹக்கூகவிதை, சென்ரீயூ, லிமரிக், லிமரைக் போன்றவற்றோடு ஜப்பானிய பழமொழியையும், சென்ரீயூ வையும் சேர்த்து 'பழமொன்ரியூ' என்றும், ஈரோசென்வியம் என்றும் யாப்பினைக்கொண்ட கவிதைகள் பலவற்றையும் உருவாக்கிய புகழ்மிக்க மகாகவி ஈரோடு தமிழன்பனின் '' வணக்கம் வள்ளுவ '' என்னும் கவிதைக் தொகுப்பில் சங்ககால காலத்திலிருந்தே தமிழ் இலக்கியத்தின் கட்டுக்கோப்பான பரிமாணங்களைக் கருத்தில் கொண்டும் திருக்குறளின் இன்றைய போக்கினைப் பலகேள்விகளோடும் சில இடங்களில் கேள்விகளுக்கான தனது பதில்களோடும் தன் ஆக்கத்தைப் பயன்படுத்தி இயற்றியுள்ள இந்நூலில் திருக்குறளினை நவீன காலத்தினோடு பொருந்தியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## திருக்குறளும், வணக்கம் வள்ளுவமும் :

*திருக்குறளுக்கு எத்தனையோ உரைகள், உரைவிளக்கம் பின்பற்றிய கட்டுரைகள், ஆய்வு நூல்கள் போன்றவை பல்வேறு தலைப்புகளில் மரபு தோன்றி இன்றைய நவீனத்துவம், பின் நவீனத்துவம் வரை வெளிவந்து இருக்கின்றன. இதனுள் உள்ளடங்கிய பல நூல்களை மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, நாடகம் ஆகியவை புனையப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இப்படைப்பு நவீனத்தின் உச்சத்தில் இருக்கும் இக்கால சமுதாயப் போக்குகளை, வள்ளுவனின் உளவியல் அடித்தளத்தில் நின்று விமர்சனம் செய்யக்கூடிய நூலாக அமைந்துள்ளது.*

*வள்ளுவனை ஒரு பேசும் கதாப்பாத்திரமாக வைத்து, அவரோடு விவாதிக்கிற, உரையாடுகிற, வணங்குகிற, உளப்பாங்கினையோடு வணக்கம் வள்ளுவ ' என்று விளித்து நேரலையில் பேசுகின்ற மொழி நடையில் சிந்தனையோட்டத்தினை செவிமடுக்க உருவாக்கப்பட்டுள்ள இப்புதுக்கவிதையானது குறட்பாக்களுக்கான உரைகுறிப்பில் உள்ளடங்காது, ஆய்வு நூலிலும் அடங்காது என்பது திண்ணமே .*

*காதல் என்பது உடற்பசி, உள்ளப்பசி, உயர்ப்பசி, பிறவிப்பசி, அப்பசி தீர்க்கும் உணர்வு நெறி எது ? என்றும், அப்பசியினை போக்கும் மருந்தாக தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் என்னும் முத்தமிழ் நுல்களை கற்க முந்துக " என்பர். ( வ. சு. ப. மாணிக்கனார், தமிழ் காதல் முகவுரை -2007) இக்கூற்றினை கால்கோளாகக் கொண்டு தமிழன்பனுக்கும் திருக்குறள் மீது கொண்ட மொழிப்பற்றோடு கூடிய ' உணர்வுப்பசி ' என்றே எண்ணத் தோன்றுகிறது.*

*வள்ளுவனிடம் வாசகனின் வினாக்கள் :*

*எதார்த்தமான சிந்தனையில் முழ்கி குறட்பாக்கள் உச்சரித்து உதிர்த்துவிடுகின்ற கருவூலங்களைக் பொருள் பொதிந்த நிலையில் ஆராய்ந்து தனக்கே உரிய கருத்தாழ்மையோடு கவிதையின் வடிவிலான உயிர்ப்புடன் இருக்கும் வள்ளுவரிடம் கேட்பதாக சில கேள்விகளைத் தொகுத்துள்ளார்.*

*அரசு, ஆட்சி, படை, கூழ், அமைச்சு, அகம், புறம், இல்லறம், துறவறம், இலக்கியம், இலக்கணம், சமயம், மொழிப்பற்று, நம்பிக்கை, அரசியல், அதிகாரத்தனம், மன்னனின் மாட்சிமை, இறையியல், மெய்யியல், சமத்துவம், நீதி, நேர்மை, நியாயம், வானவியல், நிலவியல் போன்ற அனைத்தையும் விவாத பொருளோடு சுருக்கிய அடிகளை கொண்டு இயற்றிய திருவள்ளுவனிடம் பல ஐயங்களையும் வினாவிக்கொண்டு இவையெல்லாம் இன்றையக் காலத்தில் உன் குறட்பாக்களில் மட்டுமே உள்ளது.*

*' எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் வினைபுரிகிறது' என்று எப்போது சொல்வோமோ என்றொரு ஏக்க பெருமூச்சோடு இன்றைய சமகால சமுதாயத்தை இலைமறையாகச் சாடுகிறார். கவிஞர் ஈரோடு தமிழன்பன்.*

*அகத்திணை என்பது எழுதிணை என்கிறது தொல்காப்பிய நூற்பா " 'கைக்கிளை முதலாய் பெருந்திணை இறுவாய் எழுதிணை யென்ப" என்ற அகமரபுக் கோட்பாட்டில் கைக்கிளையும், பெருந்திணையும் வள்ளுவன் கொண்ட ஒழுக்கம் சமூகத்திற்கு நல்லறம் பயப்பவையல்ல என்பதனால் வள்ளுவன் அதைக்குறிப்பிடாது விட்டொழித்தான் என்பதனை தனது சொல்லாடல் மூலம் பிரதிபலிக்கிறார் கவிஞர். இதனை,*

*தொல்காப்பிய வாசற்படி விட்டிறங்கிய*
*கைக்கிளை*
*நீ பார்த்த பார்வையில்*
*நூற்பாவுக்குள் ஓடி நுழைந்து*
*வேர்வைத் துடைத்துக் கொண்டது*
*கைக்கிளையின் கைகளைப் பற்றிக்கொண்டு*
*விசாரித்த பெருந்திணை*
*கைவிட்டுவிட்டது*
*குறட்பாவுள் இடம் கேட்டு கோரிக்கை*
*வைப்பதை....... என்னும் சொல்லாட்சியின்*
*வழி உணர்த்துகிறார்.*

சமுதாயத்தின் ஒழுங்கற்ற நிலை : எட்டாவது சீர்' என்னும் தலைப்பில் நாட்டில் இன்றைய அவலநிலையை குறளின் முதற் பொருள் வைத்து உருவகித்துள்ளார். உயர்வு – தாழ்வு, ஏழை-பணக்காரன்,ஆட்சி – மக்கள், எண்ணங்கள் – எண்ணிக்கைகள் போன்றவற்றினோடு அறமற்ற, ஒழுங்கற்ற, நேர்மையற்ற, ஆரோக்கியமற்ற ஒரு சூழல் கொண்ட சமுதாயமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறது என்ற எண்ண வேட்கையும், சமூக அயர்ச்சியும் வெளிப்படுகிறது. தற்கால போக்கில் அல்லவைகளைப் பார்த்து, நல்லவையெல்லாம் உண்ணாவிரதம் இருக்கிறது உள்ளே வரத்துடித்துக் கொண்டு என்பதை கீழ் வரும் கவிதைப் புலப்படுத்துகிறது.

" எட்டாவது சீர்கள் எல்லாம்
இப்போது உன் சிலை முன்
உண்ணாவிரதம் இருக்கின்றன.
என்ன கோரிக்கை தெரியுமா?
திரும்பவும்
நீ வந்து இன்னொரு திருக்குறள்
எழுதும்போது
ஏழு சீர்களுக்குள் இடம் தர வேண்டுமாம் "

ஈகையற்ற இழிநிலை

சங்க இலக்கியங்கள் பலவும் ஈகைநிலை 'ஆற்றுப்படுத்துதல்'என்னும் சொல்லாடல் கொண்டு விவரிக்கிறது. தமிழனின் மரபே 'ஈகைமரபு' ' என்பதனை வள்ளுவர்,

" தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை ".

என்றார். இம்மரபில் இருந்து மாறுபட்ட சமூகத்தை இன்று நம்மால் உணர முடிகிறது என்பதனை தன் கவிதை வரிகளின் வாயிலாகக் காட்டுகிறார்.

"வள்ளுவ,
எட்டாவது சீர்
உன்னைத் தேடி வந்தபோது
என்ன செய்தாய்
போடுவதற்கு ஒன்றுமில்லை
போ
என்று
வாசல் யாசகனை
வீடுகளில் விரட்டுவது போல்
விரட்டி விட்டாயா?"

என்றுரைக்கும் போது நற்பண்பற்ற சமூக நிலையில் நாம் வாழ்கிறோம். அரசும், அரசாட்சியும், அரண்மனையும் தற்போது விளையும் அரசன் கையில் அடைக்கலப்படுத்த போது தான் மாணிக்க கற்கள் பதியப்படும் இடத்தில் மக்கள் பதியப்படுவார்கள். இவையெல்லாம் விவரித்த வள்ளுவம் எது என்று வினாவியது போது இயற்கையே வள்ளுவம். அதடோல்லாது செயற்கையின் வடிவத்தை இப்பூமியானது சந்திக்கும் போது மரபையிழந்த, மனித நேயத்தை பிரதிபலிக்காத அறவழியற்ற சமூகமாகவே எதிரொலிக்கும் என்பது வள்ளுவரின் கூற்று

அன்பென்ற நல்ஆயுதம் :

உலகில் பயணிக்கும் அனைத்து உறவுமாய் கோயில்லாத இறையை, மலையோடு போராடும் மடமையை, விளக்கில் மறைக்கும் வெளிச்சத்தை, மனிதனை மனிதனுக்குள் புதைக்கும் குரோதத்தை ஒழித்து எந்நிலையாயினும் தன்நிலை மாறாது இயல்போடு கூடிய இலக்கை நோக்கியே அன்போடு கூடிய அறவாழ்வினையே பின்பற்றி வாழ வேண்டும் அப்போது மனிதனும், மானுடமும், மனித நேயத்தை விட்டொழியாத விடுதலையடைந்த சமூகத்தை படைக்க முடியும் என்று அறிவுறுத்துகிறார்.

இதனை,

கிண்ணமான பின்னும் அதை விட்டு
விலகாத வெள்ளியைப் போல்

பனையான பின்னும் அதை விட்டு
விலகாத மண்ணைப் போல்
வென்ற பிறகும் மனிதனை விட்டு
விலகாத ஆயுதம்
அன்பு...........

என்ற வரிகளின் வாயிலாக தற்கால சமுதாயத்திற்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது.

மானுடம் போற்ற மனிதம்:

இக்காலப்போக்கில் மனித தன்மையிழந்து , மானுடம் போற்றாது மக்கள் வாழ்வியல்முறை மறந்த சூழலில், ஒருவனை அழித்து மற்றொருவனின் வாழ்க்கையை வேர்பிடித்து விருட்சம் கொள்ளும் நிலையையே நாம் காண்கிறோம். அற வாழ்க்கை அதிகாரம் அமைத்துக்கொண்டு அறம் நின்று வாழ்த்தலே ஆற்றொழுக்கு என்று கூறப்பட்ட வள்ளுவத்தின் நிலையில் “ மனிதனை மனிதனுக்குளே வாழ்க்கை புதைத்தது பார்த்து வள்ளுவர் உள்ளம் பதைத்தது” என்னும் வரிகளில் மானுடத்தின் உளவியல் உச்சம் காட்டப்படுகிறது.

வள்ளுவரும், வள்ளுவமும் இன்றையளவில் குறட்பாக்களிலே புடம்மிடப்பட்டிருக்கிறது. அந்த சொற்களைக் கடந்து, பொருள்புரிந்தமாட்டு மானுடம் பயணிக்கவில்லை என்பது உண்மை. திருக்குறளின் பொருள் வேரோன்றாகக் கருதப்படும் பொழுது, அவரவர் தன்மைக்கேற்ப அவற்றிற்கான உண்மைப் பொருள் அறியாது பலர் வாழ்கின்றனர் நான் யார்? நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற புரிதல் உத்தியோடு வாழ வேண்டும். அது மற்ற நிலையில் பல்வேறு வாழ்க்கைத் தத்துவங்களை உரைத்தாலும் மெய்ப்பொருள் அறியாது, பொய் பொருள் கொண்டு புரட்டுகின்றனர் இன்றும் பலர், இங்கு

“ இராசபுரவிகளின் குளம்புகள் அடியில்
நொறுங்கும் குடி மக்கள்,
பெயரில்லாத தம் இராகங்களில்
கண்ணீராய் வழிந்தனர்
பகல்களின் சாம்பலை
இரவு நதியில் கரைத்தும் கொண்டிருந்த மக்கள்
அரசின் அங்கீகாரம் பெற்ற கழுகுகளால்
கொத்தித் தின்னப்பட்டனர்.

என்னும் போது எவ்வளவு கலாச்சார சிரழிவுகளை இச்சமுகம் நோக்கி பயணித்து கொண்டிருக்கிறது என்பதனை சாதாரண மக்களும் உணர முடிகிறது. தவறன்றோ, சரியின்றோ, ஒன்றுமில்லை இவ்வுலகில், என்ற நிலையில் தத்துவர்த்த சிந்தனைகளையோ, இயல்பான கருத்துக்களையோ நெறிப்பெற முடியா நிலையில் இன்றைய சூழல் அமைந்திருக்கிறது.

இயற்கையின் இரத்த நாளங்களை இறையாக்குதல் :

வானம், பூமியும் சேர்ந்துதான் இயற்கை இவையிரண்டையும் மறுநிகழ்த்தி அவற்றை அழிப்பதை கண்டால், பூமியை தாயாக போற்றும் வள்ளுவரின் சிந்தனைகள் சிதைக்கிறது என்கிறார் கவிஞர்,

“ வைகறையை அந்தியை வானவில்லை
விற்றுக்
காசாக்க துடிக்கும் கற்றவர்கள் “

என்ற வரிகளின் வழி உணர்த்தப்படுகிறது. உறவுநிலையில் தலைச் சிறந்த ஒன்றாக போற்றும் நாட்டினை திருக்குறளில் அதிகாரங்களின் பகிர்வுடன் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தியல் மாற்றத்தினை, இலக்குகளின் எதிர் நோக்கோடு நட்புறவுக் கொள்ளக்கூடிய பரிணாம நிலையே நாம் காண்கிறோம்,

“ நட்பாவது, வெங்காயமாவது
நமக்கவரால் என்ன லாபம்
என்பவர்கள்
வள்ளுவ வாசகத்தின் உள்ளே புகுந்து

இதயங்களை இணைக்க
அவர் தயாரித்து வைத்த ஈரசங்கிலியைச்
சிதைத்தனர் "

என்னும் கவியின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

விலை மாதர்களின் வெகுமதிகள் :

இல்லத்திற்கும், நல்லத்திற்கும் பல தத்துவங்களை, வரன்முறைகளை, வழிகளை, அறிவுரைகளை, பெண்ணியக் கோட்பாடுகளையும் விவரித்துக்கூறிய வள்ளுவனிடம் சில வினாக்கள் தொடுக்கப்படுகிறது எழுப்புவதாக இக்கவிதைப் புலப்படுத்துகிறது.

" மாய மகளிர்
என்று எங்களை வருணித்த
வள்ளுவரே!
எங்கள் அனுபவம் உங்களுக்கு
உண்டோ!
' மாயும் மகளிர் ' என்று
திருத்தம் செய்தால் உங்கள்
பாட்டு
தளை தட்டாது என்று நினைக்கிறோம் ".

'மாயும் மகளிர் ' என்ற சொல்லாட்சி உள்ளக் குமுறலின் உச்சத்தைத் தொடுவதாக பயன்படுத்தப்பட்டுள்ளது. வாழ்க்கையின் சாதாரணத்தை உணர்ந்து வாழ முடியாத நிலையில் தங்கள் பயணத்தை கடப்பதாக துக்கத்தின் விளிம்பில் நின்று விலை மாதர்கள் கூறுவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

" எங்கள் உடம்பின்
எந்த ஓர் அங்குலத்திலும்
எங்கள் ஆன்மாவுக்கு இடம் இல்லை "

பாலியல் தொல்லை, வன்புணர்வு, கற்பழிப்பு, பெண்களுக்கான அநீதிகள் போன்ற பல்வேறு வகையான கொடூரமான செயல்களில் மானுடம் முழுவதும் விடுதலை பெறா நிலையை காண முடிகிறது.

புராண, இதிகாசங்களில் முற்றும் துறந்த முனிவர்கள் இராஜ குலத்திற்காக குழந்தைப்பேறு கடனைக் தீர்க்கும் போது தங்கள் உடம்பை விட்டு வெளியேறிவிடுவார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். அதனைபோன்றே " காமக்கழுகுகள் கொத்தும் போது நாங்களும் எங்கள் உடம்பிலிருந்து வெளியேறி விடுகிறோம் " என்று வலிகளோடு வடிவமைக்கப்பட்ட சொற்களால் புனையப்பட்டது இக்கவிதை.

தொகுப்புரை :

மகாகவி என்றதும் இலக்கிய உலகில் இனங்காணக்கூடிய பாரதியைப் போன்று, தற்கால கவிதைஉலகில் ' மகாகவி ' என்றதும் ஈரோடு தமிழன்பனைக் குறிப்பது அவருடைய கவித்திறத்தை காட்டுகிறது. மற்றொரு சிறப்பாக பல புதிய யாப்பியல் கவிதை வடிவங்களை தமிழில் அறிமுகப்படுத்தியுள்ளார். 'ஈரோ சென்வியம்' எனும் புது யாப்பைக் கண்டறிந்து அதனை அடியொற்றி 121 கவிதைகளையும் படைத்துள்ளார். அதனோடு சேர்ந்து சென்ரீயு, லிமரைக்கூ, சின்கொயன் காசல் போன்ற அமைப்புகளையும் அறிமுகப்படுத்தியவர் இவரே. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐந்திணைகளோடு தமிழனின் வாழ்வியல் என்பதனை, தொல்காப்பியத்தைச் சுட்டிக்காட்டி கைக்கிளையும், பெருந்திணையும் நல்லறத்தில் இடம் பெறாது என்பதனையும் சிறப்பாக கவிதையில் புலப்படுத்தியுள்ளார். வள்ளுவன் கற்பித்த வாய்மொழிகள் எல்லாம் வெறும் ஏட்டில் மட்டுமே உள்ளது பாட்டினில் வரவில்லை,எப்போது வரும் என்று சொல்வோமோ என்னும் போது சமூகத்தின் மீதான ஏக்க தாகத்தை வெளிக்காட்டியுள்ளார்.

வள்ளுவனின் குறள் அமைப்போடு, சமுதாயத்தின் கட்டமைப்பினை உவமைப்படுத்தி ஒப்பிட்டுக் கூறும்திறம் தமிழன்பனுக்கு மட்டுமே உரியது. நல்லற பெண்களின் இலக்கணத்தை புனைந்த குறளின் பொருள்கள், விலைமாதர்களின் அவலத்தை' மாயா மகளிர் ' என்ற பதத்தோடு நிறுத்தி விட்டேயே என்று கற்பனை நயப்பட உரைக்கிறார். ஆளும் உடைமை வகுப்பினர், ஆளப்படும் மக்களுக்காகவே என்ற கருத்துரையோடு, நட்பின் இலக்கணத்தை கடவுளை

கோயிலிலிருந்து விடுதலை செய்தல், பொருளுக்கு பொருளதுவே என்னும் கோட்பாடுகள் போன்றவற்றையும் எடுத்துரைக்கும் மாண்பு அளப்பறியது.

வள்ளுவருக்கு பொருள் வள்ளுவர் இல்லை என்றான பின் வள்ளுவரை ஏன்? நான் படிக்க வேண்டும் எதிர்வாதக் கருத்தினை முன்னெடுக்கிறார். காலமும் கவிஞரும் சேர்ந்து நமக்களித்த வள்ளுவன் மீதான " வலியும் வலிமையுமே " இந்நூலாகும். இது திருக்குறளும், திருவள்ளுவரும் பற்றிய அடிப்படைச் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உண்மை.

நோக்கு நால்கள்


1. தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம் இரா. இராசேந்திரன் ஸ்ரீநந்தினி பதிப்பகம், சென்னை (2007)
2. வணக்கம் வள்ளுவ! ஈரோடு தமிழன்பன், பூம்புகார் பதிப்பகம், சென்னை (2018)
3. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், வலிக்கண்ணன் பாரி நிலையம் பிராட்வே சென்னை (2008)
4. தமிழ் இலக்கிய வரலாறு (1994) அ. ஜெயம், சந்திரலேகா வைத்திய நாதன், ஜனகா பதிப்பகம், சென்னை.
5. தமிழ் இலக்கிய வரலாறு (2007) சாகித்திய அகாடமி, இரவழுந்திர பவன்,35, பெரோஷ்ஷா சாலை, புதுதில்லி. (2007)
6. தமிழ்க் காதல் வ.சு.ப. மாணிக்கம் சுரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை.


********* ********* ********** ********* ********* ********** ********** **********